செ.வெ.எண்:30/ஜனவரி நாள்: 20.01.2016

# செய்திக்குறிப்பு

இராமநாதபுரம் மாவட்ட அளவில் - வளர்ப்பு பராமரிப்பு (Foster Care) வழிகாட்டி நெறிமுறைகளின் படி இளைஞர் நீதி சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற குழந்தைகள் இல்லங்களில் உள்ள தத்துக்கொடுப்பதற்கு உரிய ஆவணங்கள் இல்லாமல் இருக்கக்கூடிய குழந்தைகள் மற்றும் பெற்றோர் பராமரிப்பு செய்ய இயலாத நிலையில் குழந்தைகள் இல்லங்களில் தங்கும் குழந்தைகளை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு மூலம் கண்டறியப்பட்டு, இக்குழந்தைகளை குடும்பச் சூழலில் வளர்வதற்கு ஏற்ற சூழலை உருவாக்கிட வளர்ப்பு பராமரிப்பு முறை பெற்றோர் தேவைப்படுகிறது. வளர்ப்பு பராமரிப்பு பெற்றோர் - என்பவர் சொந்த குழந்தைகள் இருந்தோ அல்லது தத்து எடுப்பதற்கு உரிய தகுதிகள் இருந்து தத்தெடுப்பிற்கு பதிவு செய்து காத்திருப்போர்களாக இருப்பவர்கள் மற்றும் குழந்தை இல்லாதவர்கள் யார் வேண்டுமானாலும் உரிய நடைமுறைகளை பின்பற்றி வளர்ப்பு பராமரிப்பில் குழந்தைகளை வளர்க்கலாம். சமூதாயத்தில் உள்ள குழந்தைகளில் பெற்றோர்கள் பராமரிப்பு செய்ய இயலாத நிலையில் அல்லது பெற்றோர் இன்றி தவிக்கும் குழந்தைகளை - வளர்ப்பு பராமரிப்பு பெற்றோர் என்ற வகையில் பராமரிப்பு செய்ய தயார் நிலையில் உள்ளவர்கள் நேரடியாக தலைவர் / உறுப்பினர், குழந்தைகள் நலக்குழு, நீதிமன்றம் தென்புறம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், இராமநாதபுரம் முகவரியில் அணுகலாம். வளர்ப்பு பராமரிப்பு காலங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் மூலம் ஒரு குழந்தைக்கு மாதம் ரூ.2000/- வீதம் வளர்ப்பு பெற்றோருக்கு உதவித்தொகையாக 3 ஆண்டுகள் வழங்கப்படும். இந்த வளர்ப்பு பராமரிப்பு குறுகிய காலம் அல்லது நீண்ட காலம் அல்லது குழந்தையின் 18 வயது வரை அனுமதி வழங்கப்படும். விண்ணப்பம், நிபந்தனைகள், நடைமுறைகளை பெற்றோர்கள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு தொலைபேசி எண். 04567-231098, அல்லது மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, நீதிமன்றம் தென்புறம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், இராமநாதபுரம் என்ற முகவரியில் நேரில் தொடர்பு கொண்டு விபரங்கள் அறியலாம்.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**